بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# ஜும்ஆ பேருரை

May 02
2014


அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**

*(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)*

**மொழியாக்கம் : முஅல்லிம் M. நிஸாமுத்தீன் சாஹிப்**




Biatul Futuh, London

## இறை நெருக்கத்தைத் தேடுதல்

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ. الرَّحْمٰنِ الرَّحِيْمِ. مٰلِكِ يَوْمِ الدِّيْنِ. اِيَّاكَ نَعْبُدُ

وَ اِيَّاكَ نَسْتَعِيْنُ. اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ. صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய மேற்கோள்களை ஆதாரமாகக் கொண்டு நான் கடந்த குத்பாக்களில் இறைஞானம் பெறும் வழிகள், இறை நேசத்தைப் பெறும் வழிகள், அல்லாஹ்வுடைய சுய இருப்பைக் குறித்த விளக்கம் ஆகியவற்றைக் கூறி வருகிறேன். இன்று நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய மேற்கோள்களை எடுத்து வைத்தவாறு அன்னாரின் அறிவுக் கருவூலங்களிலிருந்து சில சான்றுகளை எடுத்து வைப்பேன். அவற்றில் அன்னார், அல்லாஹ்வுடைய நெருக்கத்தின் உண்மை நிலை, அதனை பெறுவதற்கான சில வழிகள், அதன் முக்கியத்துவம், தமது ஜமாஅத் அதைப் பெற வேண்டும் என்ற எதிர்பார்ப்பு ஆகியவற்றை வெளிப்படுத்தியுள்ளார்கள். அல்லாஹ்வை பெறுவதற்கு, அசல் நன்னெறிகள் அல்லாஹ்விடமே உள்ளன என்பதை உணர வேண்டும். அவன் புறமிருந்தே நன்மைகள் வருகின்றன. இறைவனது போதனையைக் கடைபிடிப்பதன் மூலம் அது கிடைக்கிறது. இதன் விளைவு, இறைவனது வெகுமதிகளும் அவனது நெருக்கமும் ஒரு மூஃமினுக்கு கிடைக்கிறது.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:***

உண்மையில், அல்லாஹ்விடத்தில் அன்றி வேறெங்கும் நன்மை இல்லை. அனைத்து உயர் நல்லொழுக்கங்களும் நன்மைகளும் அவனுக்கே உரியவை. எந்த அளவுக்கு ஒருவர் தனது நஃப்ஸின் விருப்பத்தை முற்றாக அழித்து விட்டு அல்லாஹ்வின் நெருக்கத்தை மட்டுமே பெற்றாரோ அந்த அளவு இறை நல்லொழுக்கங்கள் அவரது நஃப்ஸில் பிரதிபலிக்கின்றன. அதாவது அவரது நஃப்ஸின் விருப்பங்கள், இஷ்டங்களிலிருந்தும் உயர்ந்து அல்லாஹ்வுடைய நெருக்கத்திற்காக முயற்சி செய்யும் போது பிறகு அவனது நெருக்கம் அவருக்கு கிடைத்தே வருகிறது.

இறை நல்லொழுக்கங்கள் அவரது நஃப்ஸில் பிரதிபலிக்கின்றன. இதன் விளைவாக மனிதன் தனது நஃப்ஸை விட்டு உயர்ந்து, தனது சுய விருப்பங்களை விட்டு விட்டு அல்லாஹ்விடம் மூழ்கிவிட முயற்சி செய்யும் போது பிறகு அல்லாஹ்வின் நல்லொழுக்கங்கள், அல்லாஹ்வின் சாயல்கள் அவனிடம் தென்படத் தொடங்குகிறது. பிறகு அவன் எந்த அளவுக்கு அல்லாஹ்வின் சாயலில் உருவேற்றப்படுவான் எனில், அவனது கட்டளைகளின்படி அமல் செய்வதற்கு வாய்ப்பு கிடைத்துக் கொண்டே இருக்கும்; வளர்ந்து கொண்டே இருக்கும்.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:***

அடியானுக்கு இந்த சிறப்பும் பண்புகளும் கிடைக்கும் என்றால் இது இறைவனது நெருக்கத்தால் மட்டுமே கிடைக்கும். அதுவே தேவையானதும் கூட. ஏனெனில் படைப்பினங்கள் ஒரு பொருட்டே அல்ல. எனவே உயர்

நல்லொழுக்கங்களின் பிரதிபலிப்பு, திருக்குர்ஆனை முழுமையாகப் பின்பற்றுபவருக்கு கிடைக்கிறது. அல்லாஹ் அத்தகைய உள்ளத்தில் தான் பிரதிபலிக்கின்றன. அவரிடமிருந்து அவன் வெளிப்படுகின்றான். அத்தகையவர் திருக்குர்ஆனை முழுமையான முறையில் பின்பற்றுபவராக இருப்பார்.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:***

நம்பத்தகுந்த அனுபவம் இதனை தெரிவிக்க முடியும். தூய, தெளிந்த ஆன்மீக சிந்தனையாலும், அன்பாலும் நிரப்பப்பட்ட உயர் நல்லொழுக்கங்கள் இத்தகையவர்களிடமிருந்து வெளிப்படுகின்றன. இவர்களுக்கு இணையாக உலகில் எவரையும் காண முடியாது.

ஒவ்வொருவரும் வாயினால் வாதம் செய்தாலும், வாயளப்பதற்கு ஒவ்வொரு நாவும் தான் அசையும். ஆனால் நம்பத்தகுந்த அனுபவம் என்ற குறுகிய வாசல் வழியே அமைதியுடன் வெளிப்படுபவர்கள் இம்மக்களே ஆவர். மற்றவர்கள் சிறிது உயர் நல்லொழுக்கத்தை வெளிக்காட்டினால் கூட அதனை பகட்டாகவும் செயற்கைத்தனமாகவுமே வெளிக்காட்டுகிறார்கள். அல்லாஹ்வின் சாயலில் உருவேற்றப்பட முயற்சிப்பவர், திருக்குர்ஆனின் கட்டளைகளின்படி அமல் செய்ய முயற்சி செய்பவர் ஆகியவர்களிடமே நம்பத்தகுந்த நல்லொழுக்கம் வெளிப்படும். உலகில் இவர்களைத் தவிர வேறு எவரும் உயர் நல்லொழுக்கத்தை வெளிப்படுத்துகிறார் எனில் அல்லது வெளிப்படையாக நல்லொழுக்கம் வெளிப்படுவதாகத் தெரிகிறது எனில் அது போலியானது; பகட்டானது; செயற்கைத்தனமானது ஆகும்.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:***

தனது மாசுகளை மறைத்துக் கொண்டு, தனது நோய்களை அமுக்கி வைத்துக் கொண்டு, பொய்யான நல்லொழுக்கத்தை வெளிப்படுத்துகின்றனர். அவர்களிடம் அழுக்குகளும், கறைகளும் உள்ளன. அவை மறைக்கப்பட்டுள்ளன. நல்லொழுக்கம் அவர்களிடம் இருப்பதில்லை. வெளிப்படையான செயற்கைத்தனமே இருக்கிறது.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:***

தமது பொய்யான நல்லொழுக்கத்தைக் காட்டுகின்றனர். அவர்கள் சிலவற்றை மறைக்கின்றனர். சின்னஞ்சிறு சோதனைகளின்போது அவர்களின் செயற்கையான திரைகள் அகற்றப்பட்டு, அவர்களின் மாசுகள் வெளிப்படுகின்றன. அவர்களுக்கு சோதனை வரும்போது அவை வெளியே வந்து விடுகின்றன. அவர்களுடைய வழக்குகளின் போது அவர்கள் என்ன தரத்தில் இருக்கிறார்கள்? என்று தெரிந்து போய் விடுகிறது. பொய், உண்மை, யதார்த்த குணம் அனைத்தும் வெளியே வந்து விடுகின்றன. எவ்வளவு பொய் அவர்களிடம் உள்ளது என்று தெரிந்து விடுகின்றது. உண்மை எவ்வளவு மறைக்கப்படுகிறது என்று தெரிந்து விடுகிறது. எந்த அளவுக்கு நல்லொழுக்கம் காட்டுகிறார்கள் என்று தெரிந்து விடுகிறது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஒருமுறை உதாரணமாக எடுத்து வைத்தார்கள்: ஓரிடத்தில் பெரும் படித்தவர்களின் ஒரு சபையில் – சமூகத்தில் தம்மை பெரிய மனிதர்களாகக் காட்டிக் கொண்டிருப்பவர்களின் ஒரு சபையில் ஒரு முடிவு எடுக்கப்பட்டது. இன்றைய சபை ஒரு யதார்த்தமானதாக இருக்க வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது.

அன்னார் கூறுகின்றார்கள்: அவர்களின் யதார்த்த நிலையின் தகுதி எவ்வாறு இருந்தது எனில் அனைத்து வீணான அனாச்சாரமான காரியங்களும் நடந்தன. அவர்கள் அனைவரின் இலட்சணமும் அங்கு வெளிப்பட்டு விட்டது.

கூறினார்கள்: பகட்டான, செயற்கையான நல்லொழுக்கங்களைக் காட்டுகின்றனர். அவர்களுள் பெரும்பாலார் அவ்வாறு செய்ய காரணம், உலகம் மற்றும் சமுதாயத்தின் அமைப்பில் அதனைக் காண்கின்றனர்.

நல்லொழுக்கம் செயற்கையாகவும், பகட்டாகவும் அவர்கள் காட்டுவது அவர்களின் உலகம், உலக விவகாரங்கள், அவர்களின் சமுதாயம் இவற்றில் மேற்கண்ட பண்புகளைக் காட்டுவது தேவையானது என்று கருதுகின்றனர். அதனால் தான் இலாபம் ஏற்படும் என்று நினைத்து செய்கின்றனர்; நல்லொழுக்கம் காட்டப்படுகிறது. அதுவன்றி இறை திருப்தியைப் பெறுவதற்காக அன்று.

கூறினார்கள்: அவர்கள் தமது அந்தரங்க அழுக்குகளை எல்லா இடத்திலும் மேற்கொண்டால், சமுதாயத்தில் அவர்களது மதிப்பு குறைந்து விடும். அவர்களின் உள்ளத்திலுள்ள அழுக்குகளின் பின்னால் சென்றால், அவர்களின் உலகியல் பணிகளையும் அது பாதிக்கும். எனவே அந்த நல்லொழுக்கம் காட்டுவதன் நோக்கம் கூட முழுக்க முழுக்க

சுய இலாபம் கருதியே ஆகும். நல்லொழுக்கத்தைக் கடைபிடிப்பதற்காக அன்று. நல்லொழுக்கம் மூலம் இறை திருப்தியைப் பெறுவதற்கன்று. நல்லொழுக்கத்துடன் நடப்பது பிறருக்கு நலன் பயக்க வேண்டும் என்பதற்காக அன்று.

ஒருவர் தனது இயல்பினால் நல்லொழுக்கத்தின் விதை அவரிடம் இருந்தாலும் பெரும்பாலும் நஃப்ஸின் விருப்பங்கள் என்னும் முட்களால் அது அழுத்தப்பட்டு விடுகிறது. நஃப்ஸின் சுய நோக்கங்களின்றி மாசற்ற முறையில் அல்லாஹ்வுக்காக மட்டுமே நல்லொழுக்கம் செய்யப்படா விட்டால் அது தனது முழுமையை எட்டாது. மாசற்ற முறையில் அல்லாஹ்வுக்காக நல்லொழுக்கம் காட்டியவரின் விதையே அவன் எல்லாவற்றின் மாசுகளிலிருந்து அகற்றப்படுகிறது. இறைவனே முற்றிலுமாக அவரது நஃப்ஸை தூய்மையால் நிறைந்து விடுகிறான். இறைவனுக்காக எல்லாவற்றையும் செய்பவர் அவன் அல்லாத மாசுகளை விட்டு முற்றிலுமாக தூய்மையாகின்றனர். பிறகு அல்லாஹ் தனது நல்லொழுக்கத்தால் அவரை நிறைந்து விடுகின்றான். அவர்களின் உள்ளத்தை அந்த நல்லொழுக்கத்தின் மீது எந்த அளவு அன்பை ஏற்படுத்தி விடுகிறான் எனில் அவருக்கு தண்ணீர் எவ்வளவு பிடிக்குமோ அதனைப்போன்று அம்மக்கள் தம்மை மாய்த்து விட்டதன் காரணத்தால் தகல்லகூ பிஅக்லாகில்லாஹ் – அல்லாஹ்வின் நல்லொழுக்கங்களை தம்மிடம் மேற்கொள்வது என்ற அந்தஸ்தை எந்த அளவுக்கு பெற்று விடுகிறார்கள் எனில் அவர்களது பசியையும் தாகத்தையும் கண்டு அவன் சுவைமிக்க நீரை அவன் தனது பிரத்யேக ஊற்றுச் சுனையிலிருந்து பருகத் தருகிறான். அதாவது ஆன்மீக நல்லொழுக்கம் என்ற இனிய நீரைப் பருகத் தருகிறான்.

***பிறகு ஓரிடத்தில் இறை நெருக்கம் பெறுவதற்கான வழிகளைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:***

இறைவன் ஏமாறக்கூடியவன் அல்ல. அவன் எத்தகையவரை தனது சிறப்பான நெருக்கம் பெற்றவராக்குகின்றான் என்றால், அவர்கள் இயல்பாகவே மீனைப் போன்று அவனது அன்பின் நதியில் நீந்துபவர்களாக இருக்கின்றனர். அவனுக்காகவே அவர்கள் இருக்கின்றனர். அவனுக்கு கட்டுப்படுலில் மாய்ந்து போகின்றனர். எனவே இறைவனைத் தவிர எல்லாரும் அசுத்தமானவர்களே. எவரும் பரிசுத்தம் ஆனதில்லை; ஆகவும் முடியாது என்பது ஒருபோதும் ஓர் உண்மையான நம்பிக்கையாளரின் கூற்றாக இருக்க முடியாது. இது ஒரு சில மக்களின், சில மதத்தினரின் கொள்கையாகும். அதாவது இறைவன் தனது அடியார்களை வீணாகப் படைத்துள்ளான் போலும்!

மாறாக, உண்மையான மஃரிஃபத் மற்றும் ஞானத்தின் கூற்றாவது, மனித குலத்தில் ஆதிகாலம் தொட்டே இறைவனது நடைமுறை என்னவென்றால், அவன் தன் மீது அன்பு கொண்டவர்களை தூய்மைப்படுத்துகிறான். ஆம்! உண்மையான தூய்மையின் ஊற்று இறைவனே ஆவான். அம்மக்கள் இறை நினைவு, வணக்கங்கள், இறைநேசம் ஆகியவற்றின் மூலம் அவனை ஞாபகம் செய்து அதில் மூழ்கியிருக்கின்றனர். இறைவனும் தனது பண்பை அவர்கள் மீது போட்டு விடுகிறான். அதன் மூலம் இறைவனிடம் யதார்த்தமாக காணப்படுகின்ற தூய்மையிலிருந்து அவர்களும் நிழலான முறையில் பங்கு பெறுகின்றனர்.

***பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:***

இந்த உயர் நல்லொழுக்கங்களையும், நன்மைகளையும் மேலும் இறைவனது நெருக்கத்தைப் பெறத் தேவையான ஊடகமாகவும், முன்மாதிரியாகவும், போதனையாகவும் இறைவன் வைத்துள்ளான். அது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களாவர். அன்னாரை முழுமையாக பின்பற்றுவதில் அவை அடங்கியுள்ளது.

இந்த வகையில் அன்னார் கூறுகின்றார்கள்: சிராத்தல் முஸ்தகீம் உடைய ஒரு கீழ்நிலை அந்தஸ்து கூட நமது நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றாமல் ஒருபோதும் மனிதனுக்கு கிடைக்க முடியாது. பிறகு நேர்வழியில் உயர் தகுதி அந்த இமாமுர் ரஸூலை பின்பற்றாமல் எப்படி கிடைக்கும்? எந்தவொரு தகுதி முழுமையும், எந்தவொரு கண்ணியம் மற்றும் நெருக்கத்தின் நிறைவும் நமது நபி (ஸல்) அவர்களை முழுமையாகவும் உண்மையாகவும் பின்பற்றாமல் பெறவே முடியாது. நாம் எதையும் பெற முடியாது. எது கிடைத்தாலும் அது நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றியதனால் நிழலாகவும், அன்பளிப்பாகவுமே கிடைக்கிறது.

பிறகு இஸ்லாத்தின் உண்மை நிலை என்ன? ஒரு முஸ்லிம் எப்படி இருக்க வேண்டும்? ஒரு முஸ்லிமுக்கு எந்த அளவுக்கு நெருக்கத்தின் தகுதியை எட்ட வேண்டும் என்று கூறுகிறார்கள். இஸ்லாத்தின் உண்மை நிலை என்னவெனில், தமது கழுத்தை குர்பானி ஆட்டைப் போன்று இறைவன் முன் வைத்து விடுவது ஆகும். தமது எல்லா விருப்பங்களையும் அழித்து விடுவது, இறைவனது அன்பில் மூழ்கி விடுவது, இறைவனில் மாய்ந்து தம்மீது ஒரு மரணத்தை ஏற்படுத்தி விடுவது, அவனது விருப்பத்தின் சாயலை தம்மிடம் முழுமையாக ஏற்றவாறு அவன் மீது கொண்ட அன்பின் எழுச்சியால் அவனுக்கு கட்டுப்படுவது. வேறு எந்த அடிப்படையிலும் இதனை செய்யாதிருப்பது,

அவனுடன் மட்டுமே பார்க்கின்ற கண்ணைப் பெறுவது, அவனுடன் மட்டுமே கேட்கிற காதைப் பெறுவது, முழுக்க முழுக்க அவன் முன் குனிந்துள்ள உள்ளத்தைப் பெறுவது, அவன் கட்டளையினால் மட்டுமே பேசுகிற நாவைப் பெறுவது இவை எத்தகைய இடம் எனில் இதில் எல்லா தேடுதலும் முடிந்து விடுகிறது. மனித ஆற்றல் தமது பொறுப்பிலுள்ள எல்லா வேலைகளையும் செய்து முடித்து விடுகிறது. மனிதன் உழைத்து இறைவனைப் பெறுவதற்காக எல்லா வகையான கஷ்டங்களையும் கடந்து இறைவனைப் பெற முயற்சி செய்வதற்கு 'ஸுலுக்' என்று பெயர்.

***பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:***

முழுமையான முறையில் மனிதனின் தீய விருப்பங்களின் மீது மரணம் வந்து விடுகிறது. அப்போது இறைவனது கருணையானது அவனது உயிருள்ள வார்த்தைகள் மற்றும் அவனது பிரகாசமான ஒளியுடன் மீண்டும் அவருக்கு ஒரு வாழ்வை வழங்குகிறது. அவர் இறைவனது இனிமையான வார்த்தைகளால் சிறப்பிக்கப்படுகிறார். நுட்பத்திலும் நுட்பமான அந்த ஒளி அறிவால் கண்டறிய முடியாது; கண்களால் சென்றடைய முடியாது. அந்த இறைவன், தானே, அவர் உள்ளத்திற்கு அருகில் வருகிறான்.

***அவன் கூறுகிறான்:***

(50:17) نَحْنُ اَقْرَبُ اِلَيْهِ مِنْ حَبْلِ الْوَرِيْدِ நாம் அவனது உயிர் நாடியை விடவும் அவனுக்கு அருகில் இருக்கிறோம். இவ்வாறு இறைவன் மாய்ந்து விட்ட அம்மனிதனுக்கு தனது நெருக்கத்தைக் காட்டுகின்றான். அப்போது அந்நேரம் வருகிறது. அவரது பார்வையின்மை அகன்று கண்கள் ஒளி பெறுகின்றன. அப்போது மனிதன் தனது இறைவனை புதிய கண்களால் காண்கின்றான். அவனது குரலைக் கேட்கிறான். அவனது ஒளியின் போர்வையால், தான் போர்த்தப்பட்டிருப்பதாக அறிகிறார். அந்நிலையில் மார்க்கத்தின் நோக்கம் நிறைவேறுகிறது. மனிதன்தனது இறைவனின் தரிசனத்தால் இச்சைகள் நிறைந்த கீழான வாழ்க்கை என்னும் அசுத்த ஆடையை தமது இருப்பிலிருந்து வீசி எறிந்து விடுகிறான். இவ்வளவு நெருக்கம் மனிதனுக்கு கிடைக்கும் போது அசுத்தமான வாழ்வென்னும் ஆடையை, உலக விவகாரங்களை மனிதன் எறிந்து விடுகிறான். ஒளி என்னும் ஆடையை அணிகிறான். அதாவது புதிய ஆடையை மனிதன் அணிகிறான். அது ஒளியாகும். அவன் வாக்குறுதி தரப்பட்டதற்காகவோ அல்லது மறுமையின் எதிர்பார்ப்பில் அங்கு இறைவனின் தோற்றம் என்ற சொர்க்கம் கிடைக்கும் என்ற நினைப்பினாலோ அல்லாமல் இவ்வுலகிலேயே இறைத் தோற்றத்தையும் பெற்று விடுகின்றான்.

பிறகு இஸ்திக்ஃபாரின் இரு வகைகளை விளக்கும் போது கூறுகின்றார்கள்: இஸ்திக்ஃபாருடன் சேரும் போது ஈமானின் வேர்கள் உறுதியாகின்றன. இது திருக்குர்ஆனில் இரு பொருள்களில் வருகிறது. ஒன்று, ஒருவர் தனது உள்ளத்தை இறைவனின் அன்பினால் ஆட்கொள்ளப்பட்டு தனிமையில் எழுச்சி கொள்கின்ற பாவத்தை இறைத் தொடர்பின் மூலம் தடுத்து நிறுத்துதல், இறைவனிடம் ஒன்றிணைந்து அவனிடம் உதவி வேண்டுதல். இந்த இஸ்திக்ஃபார் இறை நெருக்கம் பெற்றவர்களுடையதாகும். ஒவ்வொரு கணத்திலும் இஸ்திக்ஃபார் செய்வது, எப்போதும் இறைவனது எண்ணம் உள்ளத்தில் இருப்பதற்கும் அல்லாஹ்வின் அன்பு மனிதனிடம் உறுதியாவதற்கும் ஆகும். இந்த இஸ்திக்ஃபார் இறை நெருக்கம் பெற்றவர்களுக்குரியதாகும். ஒரு கணத்திற்கேனும் இறைவனை விட்டு தனித்து விடுவது அழிவு என்று கருதி அதற்காக அவர்கள் இஸ்திக்ஃபார் செய்கின்றனர். அதன் மூலம் இறைவன் தன் அன்பில் அணைக்க வேண்டும். இரண்டாவது வகை இஸ்திஃபார் என்னவெனில், பாவத்தில் இருந்து வெளிப்பட்டு இறைவனை நோக்கி ஓடுதல், மரம் பூமியில் பதிந்து இருப்பது போன்று உள்ளம் இறைவன் மீது கொண்ட பிரியத்தால் பலவீனங்களை விட வேண்டும் என்பதற்காக முயற்சி செய்தல், அதன் மூலம் தூய வளர்ச்சி ஏற்பட்டு பாவத்தின் வறட்சி மற்றும் வீழ்ச்சியிலிருந்து தப்பிப்பதற்காக முயற்சி செய்தல். இந்த இரு நிலைகளின் பெயரும் இஸ்திக்ஃபார் ஆகும்.

இறைவனை அறிவதில் பல படித்தரங்கள் உள்ளன. அவற்றுள் மிக உயரிய படித்தரம் இறை நெருக்கம் பெறுவதாகும். அதன் மூலம் சரியான கோணத்தில் இறைவனை அறிய முடிகிறது. எனவே தான் உண்மையான கனவு கண்டு விட்டேன் அல்லது எனக்கு ஆன்மீகக் காட்சி வந்து விட்டது அல்லது இல்ஹாம் வந்து விட்டது என்று நாம் மகிழ்ச்சி அடையக் கூடாது. பல்அம் –க்குக் கூட இல்ஹாம் வந்தது. அப்படியிருந்தும் அவன் தடுமாறி விட்டான். எனவே இறை நெருக்கத்தைத் தேடுங்கள். ஆனால் இறை நெருக்கம் இறைவனது தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுடன் இணைவதன் மூலமே கிடைக்கும். அவருக்கு இறைவன் தொடர்ந்து தனது ஒளியால் அருள்புரிந்து கொண்டே இருக்கிறான். இறைவனது திருப்தி அந்த அடியானுக்காக பிறகு குறிப்பானதாகி விடுகிறது.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:***

இறைவன் ஒளி ஆவான். அவன் கூறுவது போன்று அல்லாஹ் (24:36) اَللّٰهُ نُوْرُ السَّمٰوٰتِ وَالْاَرْضِ இந்த ஒளியின் வெளிப்படையான அடையாளங்களை மட்டுமே பார்ப்பவர் தூரத்திலிருந்து புகையைப் பார்ப்பவரைப்

போன்றவர். ஆனால் அவர் நெருப்பின் ஒளியைப் பார்க்கவில்லை. எனவே அவர் ஒளியின் பயனைப் பெறாதவராகவே இருக்கிறார். ஒளியின் பயன் இறைவனது திருப்தியில் மூழ்கி விடுவதன் மூலமே கிடைக்கிறது.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:***

மேலும் (இறைவன்) அதன் வெப்பத்தின் மூலம் மனித மாசுகளை எரித்து விடுகிறான். அந்த ஒளியின் பயனையும் வெப்பத்தின் பயனையும் அடையவில்லை. அதாவது மனிதனாக இருப்பதால் மனிதனிடம் சில அழுக்குகள் ஏற்பட்டு விடுகின்றன. அவை அவனை சூழ்ந்துள்ளன. அந்த வெப்பத்தையும் இழந்து நிற்கிறான். அதாவது அழுக்குகளை எரித்து விடுகிற அந்த நெருப்பையும் அவன் பெறவில்லை.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:***

அம்மக்கள் அறிவிக்கப்பட்ட சான்றுகள் மூலம் அல்லது அறிவுப்பூர்வமாக உள்ள சான்றுகள் மூலம் அல்லது யூகத்திற்கிடமான இல்ஹாம்கள் மூலம் இறை இருப்புக்கு சான்று எடுக்கின்றனர். உதாரணமாக, வெளிப்படையான உலமாக்கள், தத்துவஞானிகள். இம்மக்கள் தமது ஆன்மீக ஆற்றல்கள், ஆன்மீகக் காட்சியைக் காணும் தகுதிகள், கனவுகள் மூலம் இறை இருப்பிற்கு ஆதாரத்தைக் கேட்கிறார்கள். அவர்கள் இறைவனது நெருக்கத்தின் ஒளியிலிருந்து வாய்ப்பிழந்தவர்களாக உள்ளனர்.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:***

அவர்களிடம் எழுத்துப்பூர்வமாகவும், அறிவுப்பூர்வமாகவும் ஆதாரங்கள் உள்ளன. சில வேளை இல்ஹாம்கள் அல்லது சில கனவுகளை வைத்து யூகித்து இறை இருப்பின் மீது இறைவன் இருக்கிறான் என்று உறுதியும் கொள்கின்றனர். வெளிப்படையான உலமாக்கள் இதை வைத்து தான் இறைவனை நம்புகிறார்கள். தத்துவஞானிகளின் ஆன்மீகம், எந்த அளவுடன் நிற்கிறது எனில் அவர்களுள் சிலருக்கு ஆன்மீகக் காட்சிகள் நல்ல கனவுகள் காணும் தகுதியும் இருக்கிறது. இதனால் அவர்கள் இறைவனை நம்புகிறார்கள். ஆனால் இவையெல்லாம் இருந்தும் இறைவனின் நெருக்கத்தின் ஒளியிலிருந்து வாய்ப்பிழந்தவர்களாகவே உள்ளனர்.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:***

அத்தகைய மனிதர் தூரத்திலிருந்து நெருப்பின் புகையைப் பார்க்கிறார். ஆனால் நெருப்பின் ஒளியைப் பார்க்கவில்லை. புகையை ஆய்வு செய்து விட்டு நெருப்பின் மீது உறுதி கொள்கிறார்கள்.

***பிறகு நெருக்கத்தின் படித்தரங்களைப் பற்றி விளக்கியவாறு கூறுகிறார்கள்:***

இறை நெருக்கத்தின் படித்தரங்களும், ஏகனாகிய அல்லாஹ்வுடன் தொடர்பு கொள்வதின் படித்தரங்களும் பல வகைப்பட்டவை. அல்லாஹ்வை சந்திப்பதற்கான தகுதிகளில் பல படித்தரங்கள் உள்ளன.

ஒரு மனிதர் இறைவனின் நெருக்கம் பெற்றவராக இருந்தும் கூட, அவரை விட நெருக்கத்திலும், நேசத்திலும் உயர்ந்த நிலையில் உள்ள மனிதருடன் மோதுகிறார். இறுதி விளைவு, குறைந்த தரத்தில் இறை நெருக்கம் பெற்ற அம்மனிதர் அழிந்து போவது மட்டுமின்றி ஈமானை இழந்தவராக மரிக்கிறார். உதாரணமாக, மூஸாவுக்கு எதிராக பல்அம்பாவூர் உடைய நிலை அவ்வாறே இருந்தது.

***பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:***

இந்த நெருக்கத்தின் மிக உயர்ந்த தகுதியை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் பெற்றிருந்தார்கள்.

இப்போது நாம் பார்க்கிறோம். இக்காலத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை முழுமையாகப் பின்பற்றியதன் காரணமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு அல்லாஹ் அந்த அந்தஸ்தை வழங்கினான். இன்று இக்காலத்தில் அன்னாரை விட்டு தனியாக ஒருவர் இறை நெருக்கத்தைத் தேடினார் என்றால் அவரது முடிவும் பிறகு பல்அம்பாவூர் முடிவு போன்றே ஆகும்.

***பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:***

அல்லாஹ்வுடைய நெருக்கம் திருக்குர்ஆனைப் பின்பற்றுவதன் மூலம் கிடைக்கிறது. அத்தகைய நெருக்கம் பெற்றவருக்காக இறைவன் அடையாளங்களைக் காட்டுகின்றான். வாய்ப்பேச்சு ஒன்றுக்கும் உதவாது.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:***

திருக்குர்ஆனை உண்மையாகப் பின்பற்றுபவரை, எதிர்ப்பவரிடம் இறைவன் தனது பயங்கரமான அடையாளம் மூலம் அவரது உண்மையை நிரூபித்துக் காட்டி விடுகிறான். அவனது வசனங்களைப் பின்பற்றுகிற

அடியாருடன் அவன் இருக்கிறான். அவன் லேக்ராமிடம் வெளிப்படுத்திக் காட்டியது போன்று. அவனது மரணம் எந்த நிலையில் நிகழ்ந்தது என்றால் இறைவன் அவனது மரணம் மூலம் இஸ்லாத்தின் உண்மையின் மீது முத்திரை பதித்து விட்டான் என்பதை அவன் நன்கு உணர்ந்திருந்தான். சுருக்கமாக, இறைவன் உயிருள்ள செயல்பாடுகளுடன் திருக்குர்ஆனைப் பின்பற்றுபவரை ஈர்த்து, ஈர்த்து அவரை நெருக்கத்தின் உயர்ந்த மினார் வரை கொண்டு சென்று விடுகிறான்.

***பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:***

ஒரு விஷயத்தை நன்றாக நினைவில் கொள்ள வேண்டும். ஒவ்வொரு விஷயத்திலும் ஒரு பயன் உண்டு. உலகத்தில் பாருங்கள். மிக உயர்ந்த தரமுடைய கனிமப் பொருட்கள் முதல் சிறு சிறு புழுப்பூச்சி வரை மனிதனுக்கு பயன் தராத ஒன்றுமே இல்லை. எல்லா பொருட்களும் அவை வானத்தில் உள்ளவையாக இருக்கட்டும், பூமியில் உள்ளவையாக இருக்கட்டும். அவை அல்லாஹ்வுடைய பண்புகளின் நிழல்களும், பதிவுகளும் ஆகும். அவனது பண்புகளில் கூட பலன் மட்டுமே தான் உள்ளது என்றால் அவனது சுயம் எத்துணை நலனைக் கொண்டதாக இருக்கும்? இவ்விடத்தில் ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும். மனிதன் இப்பொருள்களிலிருந்து நஷ்டம் அடைகிறான் எனில் தனது தவறாலும், புரிந்து கொள்ளாமையாலும் ஆகும். அதன் பொருள அப்பொருள்களை நஷ்டத்தைத் தவிர வேறெதுவும் இல்லை. இறை கட்டளையில் அந்தப் பொருளில் ஏதோ பலவீனம் ஏற்பட்டது என்பது அல்ல. மாறாக தமது தவறினால் மனிதன் நஷ்டம் அடைகிறான். இவ்வாறு நாம் அல்லாஹ்வுடைய சில பண்புகளைப் பற்றி தெரியாத காரணத்தால் கஷ்டம் மற்றும் சோதனைக்குள்ளாகிறோம். அதுவன்றி இறைவன் எப்போதும் கருணையும் சிறப்பும் வாய்ந்தவனாவான். உலகில் கஷ்டத்தையும் வருத்தத்தையும் அடைவதன் இரகசியம், நாம் நமது கைகளால் செய்த தவறு, புரிதலின் தீமை ஆகியவற்றால் கஷ்டங்கள் வருகின்றன. சரியாக ஒரு விஷயத்தைப் புரிய முடியவில்லை அல்லது தெரியவில்லை எனில், அதனால் துன்பத்திற்கும் சோதனைக்கும் ஆளாகிறோம்.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:***

இந்த பண்பின் கண்களின் ஒளியால் அல்லாஹ்வை மீண்டும் மீண்டும் அன்பு செய்பவனாகவும், கண்ணியத்திற்குரியவனாகவும், அளவு கடந்த நன்மை செய்பவனாகவும் பெறுகிறோம். அவனுக்கு அதிகமாக நெருக்கத்தில் இருப்பவர் அவற்றிலிருந்து அதிகமான பயனடைய வைக்கப்படுகிறார். இந்த படித்தரம் ‘முத்தகி’ என்று அழைக்கப்படுபவர்களுக்கும் கிடைக்கிறது. அவர்கள் அல்லாஹ்வின் நெருக்கத்தில் இடம்பெறுகின்றனர். எந்த அளவுக்கு முத்தகிகள் இறைவனின் நெருக்கத்தைப் பெறுகின்றார்களோ அந்த அளவு நேர்வழியின் ஒளியில் இருந்து பங்கு கிடைக்கிறது. அவரது அறிவு, சிந்தனைகளில் சிறப்பு வகை ஒளி உருவாகி விடுகிறது. எந்த அளவு தூரத்தில் இருப்பானோ அந்த அளவுக்கு அழிவுக்குள்ளாக்கும் இருள் அவரது இதயத்தையும் மூளையையும் ஆக்ரமித்துக் கொள்கிறது. எந்த அளவுக்கு எனில் அவர்கள் (2:19) صُمٌّۢ بُكۡمٌ عُمۡىٌ فَهُمۡ لَا يَرۡجِعُوۡنَ என்பதை உண்மைப்படுத்தியவாறு இழிவுக்கும் அழிவுக்கும் ஆளாகி விடுகிறார்கள். ஆனால் அதற்கு எதிரில் ஒளி மற்றும் வெளிச்சம் பெற்ற மனிதன் மிக உயர்ந்த வகை நிம்மதியையும், கண்ணியத்தையும் பெறுகிறார்.

***இந்த வகையில் இறைவன் தானே கூறியுள்ளான்:***

(89:28–29) يٰۤاَيَّتُهَا النَّفۡسُ الۡمُطۡمَٮِٕنَّةُ ۙ‏ ارۡجِعِىۡۤ اِلٰى رَبِّكِ رَاضِيَةً مَّرۡضِيَّةً

திருப்தியடைந்த ஆன்மாவே! உனது ரப்பின் பக்கம் திரும்பி வா. அவனை விரும்பக்கூடியவனும் ஆவாய். அவனால் விரும்பக்கூடியவனும் ஆவாய்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: திருப்தியடைந்த ஆன்மா இறைவனுடன் திருப்தி அடைந்தது.

இதற்கு விளக்கமும் தந்துள்ளார்கள். சிலர் அரசாங்கத்திடம் சிறிது பெற்று அதில் திருப்தி அடைகின்றனர். சிலர் அவரது சந்ததிகள், உறவினர்கள், சுற்றுப்புறத்தினரால் திருப்தி அடைகின்றனர். ஆனால் இவை அனைத்தும் உண்மையான திருப்தியைத் தரவே முடியாது. மாறாக தாக நோயுற்றவர் போன்று இவர்களது தாகம் அதிகமாகிக் கொண்டே தான் செல்கிறது. ஆறுதல் கிடைக்காது. இறுதியில் மனிதனை இந்நோய் அழித்து விடுகிறது.

ஆனால் இறைவன் கூறுகிறான்: எந்த மனிதன் இறை நெருக்கம் பெற்று இந்த மனநிறைவைப் பெறுவாரோ அவரிடம் அளவு கடந்த செல்வம் இருப்பினும் அதனை இறைவனுக்கு எதிரில் அணு அளவுக்கும் மதிக்க மாட்டார். உலகம் அவரது இலக்காக இருக்காது. அவர் அசல் நிம்மதியைத் தேடுகிறார். அது இறைவனிடமே உள்ளது.

பிறகு அன்னார் கூறினார்கள்: இறைவன் புரிய வைத்துள்ளான். மனிதனது எல்லா நிம்மதியும் இறை நெருக்கம் மற்றும் அன்பில் தான் உள்ளது. அவன் இந்த தொடர்பை உடைத்து விட்டு உலகத்துடன் இணைந்து விட்டால் அது நரக வாழ்வு தான். பிறகு இந்த நரக வாழ்வு பற்றி ஒவ்வொருவரும் இறுதியில் தெரிந்து கொள்கிறார். அந்த நேரத்தில் அதனை தெரிந்து கொண்டாலும், பொருள், இன்பம் மற்றும் உலகத்தின் எல்லா தொடர்புகளையும் விட்டு விட்டு அவரோ அப்போது மரணிக்கப் போகிறார். உலகம் நரகம் தான் என்பதை மனிதன் ஒருநேரம் இல்லாவிடில் ஒருநேரம் உணரலாம். மரண வேளையில் அவனுக்கு நிச்சயமாக தெரிந்து விடுகிறது.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:***

மிக உயரிய தகுதியைக் கொண்ட சந்தோஷம் மனிதனுக்கு இறைவனிடமிருந்தே கிடைக்கிறது. அதனை விட மேலானதொரு மகிழ்ச்சி இல்லை. ஜன்னத் மறைந்திருக்கக் கூடிய பொருளுக்கு சொல்லப்படும். ஜன்னத்தை ஜன்னத் என்று கூறக்காரணம் அது நிஃமத்துகளால் மறைக்கப்பட்டுள்ளது. அசல் ஜன்னத் இறைவனாவான். அவனிடம் எந்த சஞ்சலமும் இல்லை. நிராகரிப்பது அவனுக்குரியதல்ல. எனவே சொர்க்கத்தின் அழகிய வெகுமதிகளுள் (9:72) رِضْوَانٌ مِّنَ اللّٰهِ اَكْبَرُ வைக்கப்பட்டுள்ளது. மனிதன், மனிதன் என்ற நிலையில் ஏதாவது துக்கத்தை அடைகிறான். ஆனால் எந்த அளவுக்கு நெருக்கம் பெற்றுக் கொண்டே செல்வானோ, தகல்லகூ பிஅக்லாகில்லாஹ்வால் சாயலூட்டப் பெறுவானோ அந்த அளவுக்கு சுகமும் நிம்மதியும் பெறுவான். எந்த அளவுக்கு இறை நெருக்கம் கிடைக்குமோ இந்நிலையில் கட்டாயமாக அதே அளவுக்கு இறைவனது நிஃமத்துகளிலிருந்து பங்கு பெறுவார். 'ரஃபஅ்' என்பதன் பொருள் இதனைத் தான் சான்று தருகிறது.

***இறைவனது நெருக்கத்தைப் பெறுபவரின் முடிவைப் பற்றி கூறுகிறார்கள்:***

ஒரு மனிதர் தனது இருப்பை இறைவனுக்கு முன் வைத்து விடுகிறார். வாழ்வை அவ்வழியில் அர்ப்பணித்து விடுகிறார். நன்மை செய்வதில் முனைகிறார் எனில் இறை நெருக்கம் என்ற ஊற்றுச் சுனையிலிருந்து கூலியைப் பெறுவார். அவர்களுக்கு அச்சமும் இருக்காது. கவலையும் இருக்காது. அதாவது ஒரு மனிதர் தனது எல்லா ஆற்றல்களையும் இறை வழியில் வைத்து விட்டார் எனில், தூய்மையான முறையில் அவரது ஒவ்வொரு சொல்லும், செயலும், அசைவும், அமைதியும், முழு வாழ்வும் அல்லாஹ்வுக்காக மட்டுமே ஆகிவிட்டது எனில், உண்மையான நன்மைகளை செய்ய முனைகிறார் எனில் அவருக்கு அல்லாஹ் தன்னிடமிருந்து கூலியை வழங்குவான். பயம், கவலையிலிருந்து ஈடேற்றம் தருவான்.

***துஆவும் இறை நெருக்கம் பெறுவதற்கான வழியாகும் என்பது பற்றி கூறுகிறார்கள்:***

துஆ என்பது இனிமையான நீரூற்று போன்றது. அதன் பக்கம் மூஃமின் அமர்ந்துள்ளார். அவர் விரும்பும் போது நீரருந்த முடியும். ஒரு மீன் எவ்வாறு தண்ணீரின்றி வாழ முடியாதோ அதுபோன்று ஒரு மூஃமினின் தண்ணீர் துஆ ஆகும். அதுவன்றி அவர் உயிருடன் இருக்க முடியாது.

அந்த துஆவுக்கான பொருத்தமான இடம் தொழுகையாகும். அதில் தான் உண்மையில் துஆ செய்ய முடியும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: அதில் தான் நிம்மதியும் மகிழ்ச்சியும் கிடைக்கிறது. தொழுகையில் நிம்மதியும் மகிழ்ச்சியும் மூஃமினுக்கு கிடைக்கிறது. ஒரு உல்லாசப் பிரியருக்கு முழுமையான மகிழ்ச்சி ஏதேனும் ஒரு தீய நடத்தையின் மூலம் கிடைத்தாலும் அது இதற்கெதிரில் ஒன்றுமே இல்லை. துஆ மூலம் கிடைக்கிற பெரிய விஷயம் இறை நெருக்கமாகும். துஆ மூலமாக மனிதன் இறைவனை நெருங்குகிறான். அவன் அம்மனிதனை தன் பக்கம் ஈர்க்கின்றான். ஆகவே இறை நெருக்கத்தைப் பெறுவதற்காக தொழுகையின் உரிமைகளைப் பேணுவது அவசியமாகும். அதனை முறைப்படி தொழும் போதுதான் அந்த கடமை நிறைவேறும். இறைவன் எவ்வாறு கூறியுள்ளானோ அவ்வாறு செய்ய வேண்டும்.

***பிறகு தொழுகை மற்றும் துஆவின் பக்கம் கவனமூட்டியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:***

மனிதனது உள்ளத்தில் இறை நெருக்கம் பெற வேண்டும் என்ற வேதனை இருக்க வேண்டும். அதனால் அவனிடம் அவர் ஒரு மதிக்கத்தக்க ஒரு பொருளாக ஆகி விடுகிறார். அந்த வேதனை அவரது உள்ளத்தில் இல்லையெனில் உலகம் மற்றும் அதில் உள்ளவற்றைப் பற்றி மட்டும் வேதனை இருக்கும் எனில் சிறு அவகாசம் பெற்று பிறகு அழிந்து விடுவார். இறைவன் அவகாசம் தரக்காரணம் அவன் ஹலீம் ஆவான். ஆனால் அவனது சகிப்புத்தன்மையிலிருந்து மனிதன் பயன் பொறாத போது என்ன செய்வது?

ஆகவே அவனுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்வது தான் மனிதனுக்கு நற்பேறு ஆகும். இபாதத்தின் தலைமையிடம் உள்ளம் ஆகும். இபாதத் செய்கிறார் தான். ஆனால் உள்ளம் இறைவன் பக்கம் திரும்பவில்லை எனில் அந்த இபாதத் எதற்கு பயன்படப் போகிறது? எனவே உள்ளம் முழுமையாக அவனிடம் திரும்புவது அவசியமாகும். பாருங்கள்! ஆயிரக்கணக்கான பள்ளிவாசல்கள் உள்ளன. ஆனால் அவற்றில் வெறும் சம்பிரதாயமான தொழுகையைத் தவிர வேறென்ன இருக்கிறது? அதுபோன்றே நபி (ஸல்) அவர்களின் காலத்தில் யஹூதிகளின் நிலைமையும் இருந்தது. அவர்களும் சம்பிரதாயமாகவும் வழக்கத்திற்கேற்பவுமே இபாதத் செய்தார்கள். உள்ளத்தில் உண்மையான ஈர்ப்பு என்ற இபாதத்தின் ஜீவன் அதில் ஒருபோதும் இருக்கவில்லை. எனவே இறைவன் அவர்களை சபித்தான். இப்போது இம்மக்கள் உள்ளத்தின் தூய்மைக்காக கவலைப்படவில்லை எனில் பழக்க வழக்கத்தால் சம்பிரதாயமாக நூற்றுக்கணக்கான முறை கரணம் போட்டாலும் எந்தப் பயனும் ஏற்படாது. நற்செயலாகிய தோட்டத்தின் பசுமை உள்ளத்தின் தூய்மையால் ஏற்படுகிறது.

***எனவே இறைவன் கூறுகிறான்:***

**(91:10–11)** قَدْ أَفْلَحَ مَنْ زَكّٰىهَا ۝١٠ وَقَدْ خَابَ مَنْ دَسّٰىهَا

தமது மனத்தை தூய்மைப்படுத்துபவரே வெற்றி பெறுவார். எவர் தூய்மைப்படுத்தமாட்டாரோ மாறாக அதனை மண்ணில் கலந்து விடுவாரோ, இச்சைகளின் குடமாக அதனை ஆக்கி விடுவாரோ அவர் தோல்வி அடைவார்.

இறைவன் பக்கம் வருவதற்கு ஆயிரக்கணக்கான தடைகள் உள்ளன என்பதை நாம் மறுக்கவில்லை. அது இல்லையெனில், உலகின் பக்கங்களில் இந்துவும் இருக்கமாட்டார்; கிறித்தவரும் இருக்க மாட்டார். எல்லாருமே முஸ்லிம்களாகவே தென்படுவர். ஆனால் அந்த தடைகளை அகற்றுவதும் கூட இறை அருளினால் தான் நடக்கும். அவனே வாய்ப்பு வழங்க வேண்டும். அதன் மூலம் மனிதன் நன்மையையும் தீமையையும் பிரித்தறிய முடியும். எனவே தான் கடைசியில் பேச்சு இங்கு தான் வந்து நிற்கிறது. மனிதன், ஆற்றலையும் சக்தியையும் பெறுவதற்காக அவன் பக்கம் திரும்ப வேண்டும்.

***பிறகு இறை நெருக்கம் பெறுவதற்காக தவ்பாவின் பக்கம் கவனமூட்டியவாறு கூறுகின்றார்கள்:***

நன்றாக நினைவில் கொள்ளுங்கள். பாவம் விஷமாகும். அதனை உண்பதால் மனிதன் மரணிக்கிறான். மரணிப்பது மட்டுமின்றி இறைவனது நெருக்கத்தைப் பெற முடியாமலும் போகின்றான். அந்த நிஃமத்தைப் பெற தகுதி பெறமாட்டான். எந்த அளவு பாவத்தால் அவன் பீடிக்கப்படுகிறானோ அந்த அளவுக்கு இறைவனை விட்டு தூரமாகிக் கொண்டே செல்கிறான். இறைவனது நெருக்கத்தால் அவனுக்கு கிடைக்கின்ற ஒளியிலும் வெளிச்சத்திலும் இருந்து விலகி விடுகிறான். இருளில் மாட்டி எல்லா புறத்திலிருந்தும் ஆபத்துகளிலும் தொல்லைகளிலும் சிக்கிக் கொள்கிறான். எந்த அளவுக்கு எனில் எல்லாவற்றிலும் பெரிய எதிரியாகிய ஷய்த்தான் அவனை ஆக்கிரமித்து விடுகிறான். அவனை அழித்து விடுகிறான். ஆனால் இந்த ஆபத்தான விளைவிலிருந்து தப்பிப்பதற்காக இறைவன் ஓர் ஏற்பாட்டையும் வைத்துள்ளான். மனிதன் அதிலிருந்து பயன் அடைந்தால் அந்த அழிவின் விளிம்பிலிருந்து தப்புகிறான். பிறகு இறைவனின் நெருக்கத்தைப் பெற முடியும். அந்த ஏற்பாடு என்ன? அல்லாஹ்வின் பக்கம் திரும்புதல் அல்லது உண்மையான தவ்பா; உண்மையான தவ்பா தான் அந்த ஏற்பாடாகும்.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:***

இறைவனது பெயர் தவ்வாப் ஆகும். அவனும் திரும்புகிறான். அசல் விஷயம் என்னவென்றால், மனிதன் பாவம் செய்யும் போது அல்லாஹ்வை விட்டு தூரம் போய் விடுகிறான். பாவம் செய்யும் போது மனிதன் அல்லாஹ்வை விட்டு விலகி விடுகிறான். அல்லாஹ் மனிதனை விட்டு விலகி விடுகிறான். ஆனால் மனிதன் திரும்பும் போது தனது பாவத்திற்காக வெட்கி, இறைவன் பக்கம் குனியும் போது, ரஹீமும் கரீமும் ஆகிய அந்த இறைவனின் கண்ணியமும் எழுச்சி அடைகிறது. அவன் தனது அடியான் பக்கம் கவனம் செலுத்துகிறான்; திரும்புகிறான். இதனால் அல்லாஹ்வின் பெயரும் தவ்வாப் ஆகும. அவனும் அடியானை நோக்கி அவனது தவ்பா ஏற்றுக் கொண்டவாறு திரும்புகிறான். இதனால் அவனது பெயர் தவ்வாப் ஆகும்.

ஆகவே மனிதன் தனது ரப்பின் பக்கம் திரும்ப வேண்டும். அதன் மூலம் அவன் அடியான் பக்கம் கருணையுடன் திரும்ப வேண்டும்.

***பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:***

இஸ்லாம் அதையே ஈடேற்றத்தின் வழி என்று கூறுகிறது. உண்மையில் அது இறைவன் தரப்பிலிருந்து ஆரம்பகாலம் முதல் நிர்ணயிக்கப்பட்டது. அது என்னவெனில், உண்மையான கொள்கைகள் தூய அமல்களில்

மூழ்குவதன் மூலம் அவனது நெருக்கத்தைத் தேட வேண்டும். அவனது நெருக்கமும் திருப்தியும் கிடைப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். இறைவனை விட்டு விலகுவதால் அவனது கோபத்தால் எல்லா தண்டனைகளும் வருகின்றன. ஆகவே, எப்போது மனிதன் உண்மையான தவ்பாவை உண்மையான வழியில் மேற்கொள்வானோ, உண்மையான வழி நடப்பவனாக ஆவானோ, உண்மையான தவ்ஹீதை ஒப்புக் கொள்வானோ அப்போது இறைவனுக்கு அருகில் வருகிறான். அவனை திருப்தி செய்கிறான். அப்போது துன்பங்கள் அவனை விட்டும் அகற்றப்படுகின்றன.

***பிறகு இறை நெருக்கத்தைப் பெறுவதற்காக பொதுவாக அஃமாலே ஸாலிஹா செய்வதன் பக்கம் கவனமுட்டியவாறு அன்னார் கூறுகின்றார்கள்:***

அஃமலே ஸாலிஹ் பெரும் நிஃமத் ஆகும். இறைவன் அமலே ஸாலிஹா மூலம் திருப்தி அடைகிறான். ஏகனாகிய அப்பெருந்தகையின் நெருக்கம் கிடைக்கிறது. அல்லாஹ்வுடைய நெருக்கம் கிடைக்கிறது. ஆனால் எவ்வாறு மதுவின் கடைசிப் பகுதியில் போதை இருக்குமோ அதுபோன்று அமலே ஸாலிஹாவின் பரக்கத்துகள் அதன் கடைசி நன்மையில் மறைந்துள்ளன. ஒருவர் கடைசி வரை போய் விட்டால், அமலே ஸாலிஹை அதன் முடிவு வரை கொண்டு போய் விட்டால் அவர் அந்த பரக்கத்துகளால் மகிழ்ச்சியூட்டப்படுவார். ஆனால் ஒருவர் இடையில் அமலே ஸாலிஹாவை விட்டு விட்டு, சேர வேண்டிய கடைசி நிலை வரை கொண்டு சேர்க்கமாட்டாரோ அவர் அந்த பரக்கத்துகளிலிருந்து விலக்கப்பட்டு விடுவார்.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:***

நான் இதனை அறிந்துள்ளேன். மூஃமின் தூய்மைப்படுத்தப்படுகிறார். அவனுக்கு மலக்கின் நிறம் வந்து விடுகிறது. எந்த அளவுக்கு அல்லாஹ்வின் நெருக்கம் அதிகமாகுமோ அந்த அளவுக்கு அவர் இறைவனது வார்த்தைகளைக் கேட்கிறார்; அதனால் ஆறுதல் பெறுகிறார். உங்களில் ஒவ்வொருவரும் தத்தமது உள்ளத்தில் சிந்தனை செய்யுங்கள். இந்த நிலை உங்களுக்கு கிடைத்துள்ளதா? நான் உண்மையாகவே கூறுகிறேன். நீங்கள் பழத்தின் தொலியின் மீது திருப்தி கொள்கிறீர்கள். ஆனால் அது ஒரு பொருட்டே அல்ல. இறைவன் சத்தை விரும்புகிறான். எனது வேலையாவது வெளிப்புறத்திலிருந்து இஸ்லாத்தின் மீது செய்யப்படும் தாக்குதல்களை தடுப்பது போன்றே உட்புறத்தில் முஸ்லிம்களிடம் இஸ்லாத்தின் உண்மை நிலையையும் உயிரையும் உருவாக்குவதும் ஆகும்.

***மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:***

மனிதனது கண்ணியம் இதிலேயே உள்ளது. இதுவே பெரும் செல்வமாகும். அது அல்லாஹ்வின் நெருக்கம் பெறுவது. இறைவன் நெருக்கமானவனாகும் போது இறைவனுடைய ஆயிரக்கணக்கான பரத்துகளை அவருக்கு இறக்குகின்றன. பூமியிலிருந்தும் வானத்திலிருந்தும் அவர் மீது பரக்கத்துகளை இறக்குகிறான்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை முறியடிக்க குறைஷிகள் எந்த அளவுக்கு ஆவேசம் கொண்டார்கள். அவர்கள் ஒரு சமுதாயமாகவும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தன்னந்தனியானவராகவும் இருந்தார்கள். ஆனால் பாருங்கள். யார் வெற்றி பெற்றார்கள்? உதவியும் ஒத்தாசையும் இறைவனது நெருக்கம் பெற்றவர்களுக்கு பெரும் அடையாளமாகும்.

***பிறகு நமக்கு இறை நெருக்கம் பெறுவதன் பக்கம் கவனமுட்டியவாறு கூறினார்கள்:***

இறைவனது சாபத்திற்கு மிகவும் அஞ்சுங்கள். அவன் பரிசுத்தமானவனும், ரோஷமிக்கவனும் ஆவான். தீய நடத்தையுள்ளவன் இறை நெருக்கம் பெற முடியாது. அகம்பாவம் கொண்டவன் இறைவனது நெருக்கம் பெற முடியாது. அநீதியிழைப்பவன் இறைவனது நெருக்கம் பெற முடியாது. மோசடிக்காரன் இறைவனது இறை நெருக்கம் பெற முடியாது. அவனது பெயருக்காக எவர் ரோஷம் கொள்வதில்லையோ அவரும் அவனது நெருக்கம் பெற முடியாது. உலகின் மீது நாய்களைப் போன்றும், கழுகுகளைப் போன்றும், எறும்புகளைப் போன்றும் விழுகின்றார்கள். உலகைக் கொண்டே நிம்மதி அடைந்து இருப்பவர் அவனது நெருக்கத்தைப் பெற முடியாது. ஒவ்வொரு தூய்மையற்ற கண்ணும் அவனை விட்டும் தூரமாக உள்ளது. ஒவ்வொரு தூய்மையற்ற உள்ளமும் அவனை அறியாமல் உள்ளது. அவனுக்காக எவர் நெருப்பில் இருப்பாரோ அவர் நெருப்பிலிருந்து ஈடேற்றம் பெறுவார். அவனுக்காக அழுபவர் சிரிப்பார். எவர் அவனுக்காக உலகை முறித்து விடுவாரோ அது அவருக்கு கிடைக்கும். நீங்கள் உண்மையான உள்ளத்துடன் முழுமையான உண்மையுடன் விரைந்து அடி வைத்து இறைவனது நண்பராகுங்கள். அவனும் உங்கள் நண்பனாகட்டும்! உங்கள் கீழுள்ளோர் மனைவியர், உங்கள் ஏழை சகோதரர் மீது கருணை காட்டுங்கள். அதன் மூலம் வானத்தில் உங்கள் மீது கருணை காட்டப்படும். நீங்கள் முழுக்க முழுக்க அவனுக்காக ஆகி விடுங்கள். அவனும் உங்களுக்காக ஆகி விடுவான்.

பிறகு தனது நெருக்கத்தில் இருப்பவருக்காக இறைவன் எவ்வாறு தனது ரோஷத்தைக் காட்டுகிறான்? எவ்வாறு எதிரிகளை முடிக்கிறான் என்பது பற்றி கூறுகிறார்கள்:

இப்போது இழிவுபடுத்தலும் எள்ளிநகையாடலும் எல்லையைத் தொட்டு விட்டது. அல்லாஹ்வுடைய நெருக்கத்தைப் பெற்று விட்டால் பிறகு இறைவன் எவ்வாறு தனது ரோஷத்தைக் காட்டுகிறான் என்று கூறுகிறார்கள். இப்போது இழிவுபடுத்தலும் எள்ளிநகையாடலும் எல்லையைத் தொட்டு விட்டது. இறை விருப்பத்தில் எவ்வளவு சோதிக்கப்பட வேண்டும் என்று இருந்ததோ அது நடந்து விட்டது. அந்நிலையில் இறைவனது நேசம் தனது நண்பனுக்காக ஆவேசத்துடன் எழுகிறது. இறைவன் அவர் பக்கம் பார்க்கிறான். அவரை அநீதியிழைக்கப்பட்டவராக காண்கின்றான். அவர் வசைமொழியப்படுகிறார்; ஏசப்படுகிறார். காஃபிர் என்று கூறப்படுகிறார். அநீதியாளர்களின் கையால் தொல்லை கொடுக்கப்படுகிறார். பிறகு இறைவன் தனது நடைமுறையைக் காட்டுவதற்காக எழுகின்றான். தனது ரஹ்மத்தை மேலும் காட்டுவதற்காகவும், தனது நல்லடியாருக்கு உதவி செய்வதற்காகவும் எழுகின்றான். அவரது உள்ளத்தில் முழுமையான முறையில் இறைவன் பக்கம் திரும்புமாறு போடுகிறான். காலையிலும் மாலையிலும் அவன் பக்கம் திரும்பவும் செய்கிறான். இவ்வாறு தான் அவனது நடைமுறை அவனது நெருக்கமானவர்களின் பொருட்டு செல்கிறது. இறுதியில் செல்வமும் உதவியும் அவருக்கு கிடைக்கிறது. இறைவன் அவரது எதிரிகளை சிங்கங்களுக்கும், சிறுத்தைகளுக்கும் தீவனமாக்கி விடுகிறான்.

இவ்வாறு அல்லாஹ்வின் சுன்னத் தமது தூய அடியார்கள் மீது செயல்படுகிறது. அவர்கள் வீணாக்கப்படுவதில்லை. அவர்கள் பரக்கத் செய்யப்படுகின்றனர். அவர்கள் இழிவு செய்யப்படுவதில்லை. பெருமை படுத்தப்படுகின்றனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடனும் இறைவனது நடைமுறை இவ்வாறுதான் இருந்தது என்று நாம் பார்த்துள்ளோம். அதில் சந்தேகமில்லை. எதிரிகளை இறைவன் இழிவுபடுத்தினான். ஒருமுறை இருமுறை அல்ல. மீண்டும் மீண்டும் பலமுறை பல்வேறு பகுதிகளில் பல்வேறு நாடுகளில் அஹ்மதிய்யத்தின் எதிரிகளின் இழிவும் அழிவும் அவமானமும் அடைவதை நாம் பார்த்தோம். இன்னும் இக்காட்சியைப் பார்க்கிறோம்.

பிறகு ஜமாஅத் அன்பர்களுக்கு குறிப்பாக பாகிஸ்தான் அஹ்மதிகளுக்கு கவனமூட்ட விரும்புகிறேன். அஹ்மதிய எதிரிகளுக்கு எதிரில் இறைவனின் பிரம்பு கண்டிப்பாக இயங்கும். கண்டிப்பாக இயங்கும். இன்ஷா அல்லாஹ். சிறு வட்டத்தில் அதனை நாம் பார்க்கவும் செய்கிறோம். பார்த்தும் வருகிறோம். பரந்த அளவில் நாம் விரைவில் இக்காட்சியைக் காண உள்ளோம். பாகிஸ்தானிலுள்ள ஒவ்வோர் அஹ்மதியும் பாகிஸ்தானுடன் தொடர்புடைய ஒவ்வொரு அஹ்மதியும் இறை தொடர்பில் மேலும் வளர்ச்சி பெறுவது அவசியமாகும்.

ஆக, உலகத்தைப் பின்னால் விட்டு விட்டு இறைவனின் நெருக்கத்தில் முன்னேறுவதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும். அதன் மூலம் அக்காட்சியை நாம் விரைவில் காண முடியும். பொதுவாக உலகிலுள்ள அஹ்மதிகளிடம் குறிப்பாக கவனம் செலுத்த வேண்டிய தேவை உள்ளது. அதன் மூலம் உலகை விட்டு ஷய்த்தானின் ஆட்சி விரைவில் முடிவுக்கு வர வேண்டும். அல்லாஹ்வின் நெருக்கம் பெற்றோரின் ஆட்சி உலகில் நிலைபெற வேண்டும். அல்லாஹ் நம்மை இந்த துஆ செய்வதற்கும் வாய்ப்பு வழங்குவானாக! அல்லாஹ்வுடன் நெருக்கம் பெற்றவர்களும் சேருவதற்கும் வாய்ப்பளிப்பானாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**

**HAZRAT KHALIFATUL MASIH V**

at BAIT-UL-FUTUH Mosque, London.

on **02.05.2014**

Translated by : Muallim M. NIZAMUDEEN Sb.

Typeset by : A. MUHAMMAD NISAR

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005. TELEFAX : 0462 - 2352456